ඌව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව

ஊவா மாகாண கல்வித் திணைக்களம்

Uva Provincial Department of Education

# முன்னோடிப் பரீட்சை - 2021(2022)

| தரம் 11 | கர்நாடக சங்கீதம் – I | நேரம் : 1 மணி. |
|---|---|---|

**கவனிக்குக.**

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- **1 – 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்டுள்ள விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**
- **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (x) இடுக.**

1. இந்தியாவின் தேசிய வாத்தியம் எனப்படுவது,
   01. மிருதங்கம் 02. வீணை 03. புல்லாங்குழல் 04. நாதஸ்வரம்

2. திருவாசகம் பாடப்படும் இராகத்திற்கு ஒப்பான பண்.
   01. பழந்தக்கராகம் 02. செவ்வழி 03. கௌசிகம் 04. முல்லைப்பண்

3. பின்வருவனவற்றுள் மிஸ்ரஜாதி அடதாளத்தினைக் குறிப்பது.
   01. $1_7$ 0 $1_7 1_7$ 02. $1_7 1_7$ 00 03. $1_5$ 0$1_5 1_5$ 04. $1_9 1_9$ 00

4. ''காந்தர்வ கானலோல'' என ஆரம்பிக்கும் சரணத்தையுடைய கீர்த்தனையின் இராகம்.
   01. ஹம்சத்வனி 02. பந்துவராளி 03. பிலஹரி 04. மத்தியமாவதி

5. பிறழ்ச்சிப் பண் எனப்படுவது.
   01. ஜன்னிய ராகம் 02. பாஷாங்க இராகம் 03. தைவதாந்தியராகம் 04. வர்ஜ இராகம்

6. தோஷ நிவர்த்திக்காகப் பாடப்படும் இராகம்.
   01. மோகனம் 02. மத்தியமாவதி 03. யதுகுலகாம்போதி 04. சுத்தஸாவேரி

7. ருத்ர சக்கரத்தில் 5வது இராகம் (ருத்ர – மா)
   01. கரகரப்பிரியா 02. கீரவாணி 03. பந்துவராளி 04. கல்யாணி

8. தாளம் தொடங்கிய பின் பாட்டு ஆரம்பிக்கும் எடுப்பு.
   01. அதீதம் 02. அனாஹதம் 03. ஆஹதம், அதீதம் 04. சமம்

9. ''மானினேர்விழி'' என்னும் தேவாரம் அமைந்துள்ள பண்.
   01. புற நீர்மை 02. கம்பீரநாட்டை 03. முல்லைப்பண் 04. கொல்லி

10. ஸகமபநிஸ் - ஸ்நிபமகஸ என்ற ஆரோகண அவரோகணத்தை உடைய இராகம்.
    01. நீல மணி 02. திலங்க் 03. கமாஸ் 04. கானடா

11. தெலுங்குப் பதங்களை இயற்றிய வாக்கேயகாரர்.
   01. கவிக்குஞ்சரபாரதி 02. கனம் கிருஸ்ணய்யர்
   03. மாம்பழக் கவிராயர் 04. ஷேத்ரக்ஞர்

12. ஸங்கிரஹ சூடாமணியின் ஆசிரியர்.
   01. வெங்கடமஹி 02. தாளப்பாக்கம் சின்னையா
   03. கோவிந்தாச்சாரியார் 04. மகாவைத்ய நாதய்யர்

13. "திசி" எனும் சக்கரத்தில் வரும் மேளராக இலக்கங்கள்.
   01. 61 – 66 02. 49 – 54 03. 13 – 18 04. 55 – 60

14. மிருதங்க இசையில் சிறந்து விளங்கிய கலைஞர்.
   01. பாலக்காடு மணி ஐயர் 02. வழுவூர் முத்து வீரப்பிள்ளை
   03. இனுவில் சின்னராஜா 04. நீடாமங்கலம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை

15. முத்துஸ்வாமி தீட்ஷிதரின் வாழ்க்கைக் காலம்.
   01. 1762 – 1827 02. 1835 – 1886 03. 1776 – 1835 04. 1810 – 1896

16. "ஹிமாத்ரிஸுதே பாஹிமாம்" எனும் கிருதியை இயற்றிய வாக்கேயகாநர்.
   01. முத்துஸ்வாமி தீட்ஷிதர் 02. சியாமாசாஸ்திரிகள்
   03. தியாகராஜ சுவாமிகள 04. பச்சிமிரியம் ஆதியப்பர்

17. 17ம், 18ம் நூற்றாண்டு காலப்பகுதியில் பிரபல்யமடைந்த இசை நாடகமாக கருதப்படுவது.
   01. கோவூர் பஞ்சரத்தினம் 02. நந்தனார் சரித்திரம்
   03. குற்றாலக் குருவஞ்சி 04. பிரபந்தங்கள்

18. கதலி ரஸத்தில் உருப்படிகளை இயற்றியவர்.
   01. சியாமாசாஸ்திரிகள் 02. தியாகராஜர் 03. தீஷிதர் 04. முத்துத் தாண்டவர்

19. கானடா இராகத்தின் தாய் ராகமாகத் திகழ்வது.
   01. பந்துவராளி 02. ஹரிகாம்போஜி 03. கல்யாணி 04. கரகரப்பிரியா

20. ரௌத்தரஸம் பொருந்திய ராகம்.
   01. காமவர்த்தினி 02. ஆரபி 03. ஹரிகாம்போஜி 04. பந்துவராளி

21. இசைக் கச்சேரிகளில் பிரதான வாத்தியமாக வாசிக்கக்கூடிய வாத்தியங்களாவன.
   01. வயலின், கஞ்சிரா, வீனை 02. புல்லாங்குழல் , தம்புரா, ஒத்து
   03. வீணை, வயலின் , புல்லாங்குழல் 04. நாதஸ்வரம் , வீணை, மோர்சிங்

22. எல்லா அங்கங்களிலும் சாகித்தியம் காணப்படும் உருப்படி.
   01. தானவர்ணம் 02. பதம் 03. இராகமாளிகை 04. பதவர்ணம்

23. ‘‘சின்னஞ் சிறுகிளியே’’ என்ற இராகமாலிகையில் ‘‘உச்சிதனை முகர்ந்தால் எனும் பாடல் பகுதி அமைந்துள்ள ராகம்.

01. மாண்டு  02. திலங்  03. வசந்தா  04. நீலமணி

24. பின்வரும் தேவாரங்களில் திருக்கேதீச்சரத் தலத்தின் மீது பாடப்பட்டது.

01. மானினேர் விழி மாதராய்...  02. பண்டு நால்வருக்கு...

03. பண்ணும் பதமேழும்...  04. அபகார நிந்தை...

25. இரட்டைப் பெயர்களுடன் விளங்கும் ஸ்வரஸ்தானங்களாவன.

01. சுத்தரிஷபம்,சாதாரண காந்தாரம் , சுத்ததைவதம் , காகன நிஷாதம்

02. சதுஸ்ருதி ரிஷபம் , சாதாரண காந்தாரம் , சுத்த தைவம் , காகலி நிஷாதம்

03. சதுஸ்ருதி ரிஷபம் , சாதாரணகாந்தாரம் , சதுஸ்ருதிதைவம் , கைஷிகிநிஷாதம்

04. சுத்த ரிஷபம் , சாதாரணகாந்தாரம் , சதுஸ்ருதிதைவம் , கைஷிகிநிஷாதம்

26. ஆனந்த பைரவி இராகத்தில் சுத்தாங்கமாகப் பாடப்படுவது.

01. புராணம்  02. திவாசகம்  03. திருப்பல்லாண்டு  04. திருப்பாவை

27. ✱  ஆகிய இசைக் குறியீடுகள் குறிப்பவை முறையே.

01. வளைவு கோடு, அன்னியஸ்வரம்  02. அன்னியஸ்வரம் , ஏற்றஜாரு

03. அன்னியஸ்வரம் , கமகம்  04. வளைவுக்கோடு, அன்னியஸ்வரம்

28. தியாகராஜரால் ஸ்ரீநாம பட்டாபிஷேகக்காட்சி கிடைத்தபோது பாடப்பட்டது.

01. ‘‘நன்னுபாலிம்ப நடச்சி வச்சிதிவோ’’  02. பாலகனகமய

03. ‘‘தெரதீயகநாதா’’  04. சியாம சுந்தராங்க

29. அப்பியாச கானத்திற்கும் சபாகானத்திற்கும் பொதுவான உருப்படி.

01. பதம்  02. வர்ணம்  03. கீதம்  04. தில்லானா

30. மேளகர்த்தா இராகம் அல்லாதது.

01. மோகனம்  02. தோடி  03. சங்கராபரணம்  04. கல்யாணி

31. ஆலயங்களில் அதிகாலையில் பாடப்படுவது.

01. தேவாரம்  02. திருப்பள்ளி எழுச்சி  03. திருவாசகம்  04. திருச்சதகம்

32. உத்தர மேளகர்த்தாக்களில் அடங்கும் இராகம்.

01. தோடி  02. பந்துவராளி  03. தேனுக  04. ஹரிகாம்போஜி

33. ‘தகிட தகதிமி’ எனும் ஜதிக்குரிய தாளம்.

01. திஸ்ரசாபு  02. கண்டசாபு  03. சங்கீர்ணசாபு  04. மிஸ்ர சாபு

34. பதாநீ / பாதநீ /ஸ்ா / ஸ்ா எனும் ஸ்வரக்கோர்வையை கொண்டமைந்த தாளம்.

01. திஸ்ர ஜாதி அடதாளம்  02. மிஸ்ர ஜாதி அடதாளம்

03. கண்ட ஜாதி அடதாளம்  04. சதுஸ்ர ஜாதி அடதாளம்

35. வில்லுப் பாட்டு நிகழ்ச்சியில் வாசிக்கப்படும் கஞ்சட் கருவி,

01. மத்தளம் 02. ஹார்மோனியம் 03. கைத்தாளம் 04. சுருதிப்பெட்டி

36. வீணை வாசிப்பின் போது விரல்களில் அணியப்படுபவை

01. நெளி 02. கூடுகள் 03. மோதிரங்கள் 04. தொப்பி

37. ஆழ்வார்கள் அருளிய பாடல் வகை.

01. திருப்புகழ் 02. தேவாரம் 03. பிரபந்தம் 04. திருத்தாண்டகம்

38. பகற் பண்களில் ஒன்று.

01. செந்துருத்தி 02. செவ்வழி 03. சீகாமரம் 04. தக்கேசி

39. சேந்தனார் அருளிய பாடல் வகை.

01. திருப்பல்லாண்டு 02. திருவிசைப்பா 03. திருவாசகம் 04. திருப்புராணம்

40. பின்வரும் கூற்றுக்களுள் முத்துத் தாண்டவர் பற்றிய சரியான கூற்றுக்களாவன.

A. பேரின்ப பதங்களை இயற்றியவர்.

B. தமிழில் பஞ்சரத்தின கீர்த்தனைகளை இயற்றியவர்.

C. "அருமருந்தொரு தனி மருந்து" எனும் கீர்த்தனை பாடினார்.

D. அப்பியாசகான உருப்படிகளை இயற்றியுள்ளார்.

01. A, B சரியானது 02. A, C சரியானது 03. A, D சரியானது 04. B, D சரியானது

ඌව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
ஊவா மாகாண கல்வித் திணைக்களம்
Uva Provincial Department of Education

# முன்னோடிப் பரீட்சை - 2021(2022)

| தரம் 11 | கர்நாடக சங்கீதம் – II | நேரம் : 2 மணி. |
|---|---|---|

**கவனிக்குக.**

- **முதலாம் வினா கட்டாயமானது. அத்துடன் வேறு நான்கு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. **பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.**
   i. நாடோடிப் பாடல்களில் இருந்து தோன்றியதாளம் எது?
   ii. பேரின்பப் பதங்களை இயற்றிய வாக்கேயகாரர் யார்?
   iii. திஸ்ர ஜாதி துருவதாளத்தின் மொத்த அட்சர எண்ணிக்கை யாது?
   iv. வாத்தியதிரயத்தில் 3 வது இடம் பெறும் வாத்தியம் எது?
   v. ''அள்ளியுண்டிடலாம் வாரீர்'' இவ் உருப்படியின் இராகம் யாது?
   vi. தோடி இராகத்தின் நேர் பிரதி மத்திம இராகம் எது?
   vii. கௌசிகம் எனும் பண்ணிற்குரிய இராகம் யாது?
   viii. இராம நாடகம் அரங்கேற்றம் செய்யப்பட்ட இடம் எது?
   ix. இந்திய சங்கீதத்தின் இரு பெறும் பிரிவுகளும் எவை?
   x. முத்துஸ்வாமி தீஷிதர் இயற்றிய இரு நவாவர்ணக் கீர்த்தனைகளின் பெயர்களை குறிப்பிடுக.

02. பின்வரும் இராகங்களுள் விரும்பிய ஒன்றிற்கு இலட்சணத்தை விரிவாக எழுதவும் (உருப்படிகள் சஞ்சாரங்கள் எழுதப்படல் வேண்டும்)
   i. கரகரப்ரியா
   ii. மத்தியமாவதி
   iii. ஹரிகாம்போஜி

03. பின்வரும் உருப்படிகளுள் விரும்பிய ஒன்றிற்கு விரிவான இலட்சணம் எழுதுக.
   i. அப்பியாசகானத்திற்கும் சபாகானத்திற்கும் பொதுவான உருப்படி
   ii. ஜதீஸ்வரம்
   iii. ''இராக கதம்பம்'' எனப்படும் உருப்படி

04. i. தவில் வாத்தியத்தின் படத்தினை வரைந்து பாகங்களை குறிப்பிடுக.
   ii. இவ்வாத்தியத்தின் அமைப்பு முறை பற்றி விளக்குக.
   iii. இவ்வாத்தியத்தினை வாசிக்கும் முறையினை குறிப்பிடுக.
   iv. இவ் வாத்தியம் வாசிப்பதில் பிரபல்யமடைந்த வித்துவான்கள் இருவரைக் குறிப்பிடுக.

05. கோபால கிருஸ்ண பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றினையும் இசைத் தொண்டினையும் பின்வரும் விடயங்களின் அடிப்படையில் ஆராய்க.

i. வாழ்க்கைக் காலம்

ii. பிறந்த இடம்

iii. பெற்றோர்

iv. இளமைக் கல்வி

v. வாழ்க்கைச் சம்பவங்கள்

vi. இசைப் பணி

vii. இயற்றிய உருப்படிகள்

viii. இவரது சீடர்களில் இருவர் பெயர்கள்

06. பின்வரும் அலங்காரத்தினை முறையாகப் பூர்த்தி செய்து எழுதுக.

| /4 | O | /4 | /4 |
|---|---|---|---|
| ஸரிகம | கரி | ஸரிகரி | ஸரிகம |

07. இந்தியாவின் 17ம் , 18ம் நூற்றாண்டின் கர்நாடக இசையின் கலாச்சாரப் பின்னனி பற்றி ஆராய்க.



LOL.lk
Learn Ordinary Level
විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න
පසුගිය විභාග ප්‍රශ්න පත්‍ර
• Past Papers • Model Papers • Resource Books
for G.C.E O/L and A/L Exams
සමනල දැනුම
විභාග ඉලක්ක ජයගන්න
Knowledge Bank
Master Guide
WWW.LOL.LK
CASH ON DELIVERY
HOME DELIVERY
Whatsapp contact
+94 71 777 4440
Website
www.lol.lk
Order via WhatsApp
071 777 4440